இல்லல்லா கூவென்று எனைமறந்து கொண்டுனையே
சொல்லவருள் மெய்ஞ்ஞானச் சுடரே பராபரமே. 46

பராபரப்பொருளே! என்னை நான் மறந்து உன்னை இல்லல்லாகூ என்று சொல்லுவதற்கு உண்மை ஞானச் சுடரே! தேவரீர் திருவருள் செய்ய வேண்டும்.

ஐயோ அடிமைதனக்கு ஆரிருந்தும் என்னபலன்
கையாற் கவிந்தணைக்கக் காணேன் பராபரமே. 47

பராபரப்பொருளே! அந்தோ! அடியேனுக்கு யாரிருந்தாலும் என்ன பலன்? கையினாற் கவிந்து அணைக்க வழியைக் காண்கில்லேன்.

ஆனாலும் ஏழை அடியேனுக்கு ஆதரவாய்த்
தானாய் இரங்கிஅருள் தாராய் பராபரமே. 48

பராபரப்பொருளே! நான் எப்படிப்பட்டவனானாலும் ஏழையாகிய அடியேனுக்கு ஆசைப்பட்டவனாய் நீதானே மனமிரங்கி திருவருள் செய்ய வேண்டும்.

தூங்கி இருந்து தொழுவோர் முகம்பார்க்கும்
வேங்கைப் புலியாக்கு விப்பாய் பராபரமே. 49

பராபரப்பொருளே! தூங்கிக் கொண்டிருந்து தொழுபவர்களுடைய முகத்தைப் பார்க்கின்ற வேங்கைப் புலியாகச் செய்வாய்.

கண்ணே கருத்தேஎன் கண்மணியே கண்ணிறைந்த
விண்ணடங்கா வெட்ட வெளியே பராபரமே. 50

பராபரப்பொருளே! கண்ணே! என்னுடைய கருத்தே! என்னுடைய கண்மணியே! என்னுடைய கண்ணுக்குள் நிறைந்திருந்த ஆகாயத்திற்கு அடங்காத வெட்டவெளியே!

காசாசை கொண்டு கலங்கியே கெட்டலைந்த
தோசியாய் நின்றேன் துணையே பராபரமே. 51

பராபரப்பொருளே! பணத்திலே ஆசைகொண்டு மனம் கலங்கிக் கெட்டலைந்த தோஷியாக நின்றேன்.

ஐயோ எனது துயர் ஆரிடத்திற் சொல்லிநின்று
[illegible] 52



முகக்கண் விழியொளியே மு...
அகக்கண் திறந்தோர்க்கு ...

பராபரப்பொருளே! மூ...
மோட்சங் கொடுக்கின்ற உத்த...
ஞானக் கண்ணைத் திறந்தவர்க...

முப்பாழும் பாழாய்நன் முத்...
கைப்பிடிப்ப தெப்போதென்...

பராபரப்பொருளே! என்...
களும் பாழாய் மோட்சம் ...
பிடிப்பது எப்போதோ?

உல்லாச மாக ஒளிதான் ...
செல்வம் பொழிந்திடவே...

பராபரப்பொருளே! ம...
உன்னுடைய செல்வம் பொழ...

மாச்சரியஞ் செய்யு மத...
காட்சி தருவதெப்போ ...

பராபரப்பொருளே! க...
மதமானது ஒடுங்கி மே...
கொடுப்பது எப்பொழுது?

சண்டாளன் என்றெ...
கொண்டணைப்ப து...

பராபரப்பொருளே...
சண்டாளனென்று சொ...
டணைப்பது உன்னுடை...

முத்திதரு மெய்ஞ்ஞ...
செத்திறந்து போன...

பராபரப்பொரு...
உண்மை ஞானம் வி...
இறந்துபோனால் என்ன...

தன்னை யறிந்து...
இன்னபடி என்...

...பகராய் பராபரமே.

பராபரப்பொருளே! அருமையான பெரிய வஸ்துவே! நீ என்மேல் அன்பாக ஒருசொல்லைப் பரிபூரணமாய்ச் சொல்ல வேண்டும். 16

ஐயோ எனக்குஉதவும் ஆதரவை விட்டுவிட்டுத்
தையலரைத் தேடித் தவித்தேன் பராபரமே. 17

பராபரப்பொருளே! அந்தோ! அடியேனுக்கு உதவி செய்கின்ற உன்னை ஆஸ்ரயிக்காமல் (ஆஸ்ரயம் - அணுக்கம்) விட்டு விட்டுப் பெண் களைத் தேடித்தேடிப் பரிதவித்தேன்.

எத்திசையும் நோக்கில் இசையாத் திருக்கூத்தாய்
வித்தைவிளை ஆட்டு விளைப்பாய் பராபரமே. 18

பராபரப்பொருளே! எந்தத் திசையைப் பார்த்தாலும் பொருந்தாத திருக்கூத்தாய் வித்தைசெய்யுங் விளையாட்டைச் செய்வாய்.

எப்பொழுதும் உன்பதத்தில் என்கருத்தே எய்துதற்கு
இப்பொழுதே கைப்பிடித்தாள் இறையே பராபரமே. 19

பராபரப்பொருளே! எந்தக் காலதிலும் உன்னுடைய திருவடிகளில் என்னுடைய மனம் பதிய இப்பொழுதே அடியேனைக் கைப்பிடித்து ஆண்டருளவேண்டும்.

வாதுக்கு அடரவரும் வம்பரைப்போல் தோசிமனம்
ஏதுக்கு அடர்வதுபான் எளியேன் பராபரமே. 20

பராபரப்பொருளே! வாதுதொழில்களுக்கு அடரும்படி வருகின்ற வீண்வம்புக்காரர்களைப்போல படுதோஷியாகிய என்னுடைய மனம் எதற்கு விரும்புகிறது? நானோ எளியவன்.

கண்ணே மனோன்மணியே கண்பார்வைக் கெட்டாத
விண்ணடங்கா வெட்ட வெளியே பராபரமே. 21

பராபரப்பொருளே! என்னுடைய கண்ணே! மனோன் மணியே! கண்ணின் பார்வைக்கெட்டாத ஆகாயத்திற்கு அடங்காத வெட்ட வெளியே!

அடக்கஅரி தாம்மாய ஐம்பொறியைக் கட்டிப்
படிக்கப் படிப்பெனக்குப் பகராய் பராபரமே. 22

பராபரப்பொருளே! ஐம்பொறிகளையும் அடக்குவது அருமையாகும். ஆனாலும் அவைகளைக் கட்டுவதற்கான படிப்பை எனக்கு அருளிச் செய்ய வேண்டும்.

எத்தவங்கள் செய்தாலும் இன்பமுடன் உன்பதத்தை
முத்த ரொருபோது முற்றார் பராபரமே. 23

பராபரப்பொருளே! சிவன் முத்தத்தையை [illegible] பெரியவர்கள் எப்படிப்பட்ட தவங்களைச் செய்தார்களா[illegible]லும் உன்னுடைய திருவடிகளை ஒருநாளும் மறவார்.

சொல்லுக்கு இணங்காத சூத்திரத்தைப் பார்த்திருக்க
அல்லும் பகலும்எனக்கு ஆசை பராபரமே. 24

பராபரப்பொருளே! வார்த்தைக்குள் அடங்காததான சூத்திரப் பொருளை தெரிசனஞ்செய்து கொண்டிருப்பதற்கே எனக்கு இரவும் பகலும் ஆகும்.

நாற்றச் சடலமதை நம்பார் முகர்ந்திருக்க
பூத்து மலர்ந்திருக்கும் பூவே பராபரமே. 25

பராபரப்பொருளே! நாற்றமான சரீரத்தை நிலையற்றதென்று நம்பாதவர்கள் முகர்ந்திருக்கும்படி பூத்த மலர்ப்பூவே.

சோற்றுப் பொதியைச் சுமந்தே திரிந்தலைந்தே
ஆற்றாமல் நின்றுகளைத்து அழுதேன் பராபரமே. 26

பராபரப்பொருளே! சோற்றுப்பொதியான இந்தச் சரீரத்தைச் சுமந்து திரிந்து அலைந்து பொறுக்கால் நின்று களைத்துக் களைத்து அழுதேன்.

காற்றுத் துருத்திதனைக் கல்லாய் அணைந்திருக்கச்
சூத்திரமாய் நின்றாய் சுழியே பராபரமே.

பராபரப்பொருளே! காற்றுத்துருத்தியான சரீரம்கல் போன்றதென்று நான் அதைச் சேர்ந்திருக்க அதில் நீ சூத்திரமா[illegible]யிருந்தாய்.

கோலத் திருவடிவு கோதையர்கள் ஆசையினால்
ஆலைக் கரும்புபோல் ஆனேன் பராபரமே.

பராபரப்பொருளே! பெண்களுடைய ஆசையினா[illegible] அழகிய என்னுடைய சொரூபமானது ஆலைவாய்க் கரும்பு போலாயிற்று (அதனால் நான் மெலிவடைந்தேன்)

கேளாயோ என்கவலை கேட்டுஇரங்கி யேஎன்னை
ஆளாயோ ஐயாபாழ் ஆனேன் பராபரமே.

பராபரப்பொருளே! நீ என்னுடைய துன்பத்தைக் கே[illegible] மாட்டாயோ, அவ்விதம் கேட்டு மனமிரங்கி அடிமையா[illegible] என்னை ஆண்டருளமாட்டாயோ, நானோ உன்பாற்ப[illegible]வன் அன்றோ?

எத்தனைதான் குற்றம் எதிர்த்தடிமை செய்தாலும்
அத்தனையும் நீபொறுப்பது அழகே பராபரமே.

பராபரப்பொருளே! நான் எவ்வளவு குற்றங்க[illegible] செய்தாலும் அவ்வளவு குற்றங்களையும் நீ பொறுத்த[illegible] அழகே.

## 130. பிலாத்துவின் முன் விசாரணை

ஆறும் *பிலாத்திடம் இயேசுவைக்—கொண்டு
ஆனவ மூப்பர்கள் வைத்தனர்—தினம்
''மூனும் கலகங்கள் செய்தவன்—தன்னை
மூத்திய மன்னவன் என்றனன்—ஒரு
நாளும் வரிசெலுத் தாமலே—நிற்க
நாட்டு ஜனங்களைத் தூண்டினன்—ஐய
கேளும் இவன்செய்த குற்றங்கள்''—என்று
கெக்கலித் தேகரம் கொட்டினர்!

நாதனைப் பார்த்துபி லாத்துவும்—''இந்த
நல்ல மதக்குரு சொன்னபோல்—பெரும்
யூதரின் மன்னவன் என்றுநீ—தினம்
உன்னைக் குறித்தது உண்மையோ?—மறை
ஓதும் இவர்சொலும் குற்றங்கள்—உன்
உள்ளம் புரிந்ததும் இல்லையோ?—மதி
போதகரே சொல்லும்'' என்றனன்—இயேசு
பொன்மொழி போல்பதில் கூறினர்:

---

*பிலாத்து: உரோமைப் பேரரசரால் நியமிக்கப்பட்ட அதிபதி. மரண தண்டனை விதிக்கும் அதிகாரம் யூதத்-தலைவர்களுக்கு இல்லை யாதலால், அவ்வதிகாரம் கொண்ட உரோமைப் பேரரசனின் பிரதிநிதியிடம் வந்தார்கள்.

''நன்மை தீமை எதுவரு மாயினும்
நான்மு டிக்க விரும்புவீர் நீரெனில்
முன்வி இத்த விதிப்படி மாற்றுவேன்
மூளு கின்ற யாவும்உம் செய்கையே!''
என்ப தாகச் செபத்தை முடித்தபின்
ஏற்ற தோழர் இடத்தினில் மீண்டனர்
அன்பு மிக்க தோழர்க ளோமிக
ஆழ்ந்த தூக்கம் தன்னில் இருந்தனர்!

''உங்கள் கண்ணில் உறக்கமும் உள்ளதோ,
உள்ளம் கூட உறங்குவ தென்னவோ?
கண்கள் கொண்டு கடவுளைக் காணுவீர்
கனிவு மிக்க செபத்தில் இறங்குவீர்!
மங்க ளங்கள் பாடிடும் முன்னமே
மற்ற வாத்திய ஒலிகளும் நிற்குமோ?
உங்கள் உள்ளம் உறுதியு டைத்ததே
ஊனு டம்பே வலிமை இழந்தது!''

இன்ன கூறி மீண்டும் திரும்பினார்
இறைநி னைந்து மண்டியிட் டோதினார்
பின்னர் அந்தச் சீடரை நோக்கினார்
பேணு கின்ற சீடர்கள் தூங்கினார்!
சொன்ன பின்பும் தூங்கிய சீடரைத்
தூங்க விட்டு நாதர் செபிக்கிறார்!
மின்னு வானத் தூதுவன் வந்தனன்
மேலெ ழுந்தே ஆறுதல் கூறினன்!



சோர்வி லாது நாதன் செபித்தநும்
துன்ப நாடி சூழ வெடித்தது
வேர்வை யோடு இரத்தம் வடிந்தது
மேனி யெங்கும் செம்புனல் பாய்ந்தது!
தேவ தான தந்தை செபத்திலே
தேவ மைந்தன் சேர்ந்து கலந்தனன்!
போர்மு கத்தின் உறுதியைக் காட்டியே
பொன்னெ ழுத்தில் சிடர்பால் கூறுவார்:



''நேர மின்று நெருங்கியே வந்தது
நேரும் ஒன்றை நினைவில் வைப்பிரே!
ஆறும் இந்த மனுமகன் பகைவரின்
அடிமை போலப் பிடிபடப் போகிறான்
சேரும் இந்தப் பாவிகள் வாழவே
தேவ மைந்தன் கையடி படுகிறான்
நீரும் அந்தச் சூழ்நிலை காணவே
நேரில் வந்தான் வஞ்சக நண்பனே!''

———

அலகு - 5

ஏசுகாவியம்



IIIrd தமிழ்

வானி லெங்கு நிலவு விழித்தது
வைய மெங்கும் காற்று விழித்தது
கானி லந்த மலரும் விழித்தது
கல்லி னுள்ளும் ஈரம் வடிந்தது
ஊனு டம்பு தூங்கி விழுந்தது
உள்ள மொன்று கண்கள் திறந்தது
தானு லாவும் தோட்டம் தன்னிலே
தர்ம தேவன் செபத்தை நினைத்.

மூன்று சிடர் முறைப்படி பின்வர
முள்ளில் நின்று தெள்ளிய நெஞ்சினன்
ஊன்றி அந்தக் கணத்தில் உரைத்தனன்:
"உள்ளி ருந்து உதிரம் வடிக்கிறேன்
தோன்றும் அந்தச் சாவினுக் கேற்றதோர்
துன்பம் என்னைத் தொட்டெடுக் கின்றது;
ஆன்ற நீங்கள் விழித்திருப் பீர்களே
ஆண்ட வர்முன் செபம்செய்து மீளுவேன்!"

என்ற வாறு ஏகினன் தனிமையில்
ஏறு மேக வானினை நோக்கினன்
நின்ற உடல்கால் நெடுந்தரை தொட்டன
நெஞ்சம் அந்த நிலத்தினில் சாய்ந்தது!
மன்றி லாழ்ந்த துயரம் வெளிப்பட,
"தந்தை யே! இக் கசப்புறு பாத்திரம்
சென்று போவ தாயின்உம் விருப்பமே
சிறிதும் எந்தன் விருப்பம் இதிலில்லை!

